தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
eISSN: 3049-0723 pISSN: 3107-7781
Vol. 4 Issue: 02 November 2025
DOI: https://doi.org/10.63300/

# தொகைச்சொற்களின் இலக்கணக் கட்டமைப்பு மற்றும் பொருண்மைப் புலப்பாட்டு ஆய்வு

(A Study of the Grammatical Structure and Semantic Expression of Thogaichcholkal)

**முனைவர் அ. ஆத்தீஸ்வரி,**
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, மதுரைக் கல்லூரி (தன்னாட்சி), மதுரை-1
*Dr. A. Atheeswari, Associate Professor, The Madura College (Autonomous), Madurai -1
Email: sumasumathi930@gmail.com, ORCiD: https://orcid.org/0009-0007-6523

**Abstract:**

"Thogai Sollgal" (தொகைச் சொற்கள்), beautifully termed as "condensed words" or "words that come in a hidden form," embody both the depth and conciseness of Tamil linguistic thought. In the Tamil grammatical system, compound words play a crucial role in achieving conciseness and richness of meaning. A compound word is formed when two or more words, by concealing (toking) the case markers, infixes of verbs, or other connecting elements that should exist between them, function as a single word. This study aims to deeply explore the socio-linguistic needs that led to the formation of compound words in the Tamil grammatical tradition, the ways they were classified based on Tolkappiyam and Nannool, and the evolutionary changes in their usage in modern Tamil. This study establishes that the grammatical structure, referred to by the verb 'togu-thal' (compounding) during the time of Tolkappiyar, was later clearly defined into six types (Case, Verb, Adjective, Simile, Conjunction, and Other-word compounds) by Nannoolar. Specifically, the extensive usage of 'anmozhiththogai' (other-word compounds) and the tendency of compound words (compounds) in modern Tamil to function similarly to compound words in creating pure Tamil terms are discussed. This study underscores the fundamental contribution of compound words to the Tamil language's tradition of lexical economy.

**Keywords**: *Summa, Tamil grammar, Tolkappiyam, Nannool, word economy, anmodi toka, compound words.*

**ஆய்வுச் சுருக்கம்:**

தமிழ் இலக்கண அமைப்பில், சொற்சுருக்கம் மற்றும் பொருண்மச் செறிவு ஆகியவற்றை அடைவதற்கு தொகைச்சொற்கள் மிக முக்கியமான பங்களிப்பைச் செய்கின்றன. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் தங்களுக்குள் இருக்க வேண்டிய வேற்றுமை உருபுகளையோ, வினைச்சொல்லின் இடைநிலை உருபுகளையோ அல்லது பிற இணைப்பியல் கூறுகளையோ மறைத்து (தொக்கி) ஒரே சொல்லாக இயங்கும் நிலையே தொகைச்சொல் எனப்படுகிறது. இவ்வாய்வானது, தமிழ் இலக்கண மரபில் தொகைச்சொற்கள் உருவான சமூக-மொழியியல் தேவைகள், தொல்காப்பியம் மற்றும் நன்னூல் ஆகியவற்றின் அடிப்படையில் அவை வகைப்படுத்தப்பட்ட விதம், மேலும் நவீன தமிழில் அதன் பயன்பாட்டில் ஏற்பட்டுள்ள பரிணாம மாற்றங்கள் ஆகியவற்றை ஆழமாக ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தொல்காப்பியர் காலத்தில் 'தொகுதல்' என்ற வினைச்சொல் மூலமாக சுட்டப்பட்ட இலக்கண அமைவு, பிற்காலத்தில் நன்னூலாரால் தெளிவாக ஆறு வகைகளாக (வேற்றுமை, வினை,

Tamilmanam

பண்பு, உவமை, உம்மை, அன்மொழி) வரையறுக்கப்பட்டமையை இவ்வாய்வு நிறுவுகிறது. குறிப்பாக, அன்மொழித்தொகையின் விரிவான பயன்பாடும், நவீன தமிழில் தூய தமிழ்ப் பதங்களை உருவாக்குவதில் கூட்டுச் சொற்கள் (Compounds) தொகைச்சொற்களைப் போலவே செயல்படும் போக்கும் விவாதிக்கப்படுகின்றன. தமிழ் மொழியின் சொல் சிக்கன மரபுக்கு தொகைச்சொற்கள் அளிக்கும் அடிப்படைக் கொடையை இவ்வாய்வு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

***திறவுச்சொற்கள்:*** *தொகைச்சொல், தமிழ் இலக்கணம், தொல்காப்பியம், நன்னூல், சொல் சிக்கனம், அன்மொழித்தொகை, கூட்டுச்சொற்கள்.*

### ஆய்வு நோக்கம்

தொகைச்சொற்கள் உருவாவதற்கான அடிப்படைக் காரணிகளை (சொற்சுருக்கம், ஓசை நயம்) கண்டறிதல்.

தொல்காப்பியம் மற்றும் நன்னூல் ஆகியவற்றுக்கிடையே தொகைச்சொல்லின் இலக்கண வரையறையில் உள்ள வேறுபாடுகளையும், தொடர்ச்சியையும் ஆய்வு செய்தல்.

பாரம்பரிய வகைப்பாடுகளான ஆறுவகைத் தொகைகளின் (வேற்றுமை முதல் அன்மொழி வரை) பயன்பாட்டுச் செறிவை நவீன காலச் சூழலுடன் ஒப்பிட்டுப் பகுப்பாய்வு செய்தல்.

மொழிப் பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில், தமிழில் கூட்டுச்சொற்களின் உருவாக்கத்தில் தொகைச்சொற்களின் பங்கு எவ்வாறு நிலைபெற்றுள்ளது என்பதை விளக்குதல்.

### ஆய்வு முறைமை

இவ்வாய்வு விளக்கமுறை ஆய்வு (Descriptive Analysis) மற்றும் வரலாற்று ஒப்பீட்டுமுறை ஆய்வு (Historical Comparative Method) ஆகியவற்றின் அடிப்படையில் இயங்குகிறது. ஆய்வுக்கான முதன்மைச் சான்றாதாரங்களாகத் தொல்காப்பியம் (சொல்லதிகாரம்) மற்றும் நன்னூல் (பதவியல், பெயரியல்) ஆகிய இலக்கண நூல்களின் மூலப் பாடல்களும், அவற்றின் உரை மரபுகளும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இரண்டாநிலைச் சான்றுகளாக, நவீன தமிழ் இலக்கணவியலாளர்களின் தொகைச்சொல் குறித்த ஆய்வுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### *அறிமுகம்*

தொக்கி வரும் சொற்கள் (மறைந்து வரும் சொற்கள்) தொகைச் சொற்கள் எனப்படுகின்றன. அதாவது வேற்றுமையுருபுகள், உவம உருபுகள், உம் எனும் சொல், வினை, பண்புச் சொற்களின் ஈறு இவை மறைந்து வருவது தொகைச்சொல் எனப்படுகிறது. வேற்றுமை முதலான பொருள்களின் மீது ஒன்றும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாமல் ஒற்றுபோல் பொருந்தி நிற்பது தொகைச் சொற்கள் எனச் சுட்டப்படுகின்றன. "தொக்கி வரும் சொற்கள்" அல்லது "மறைந்து வரும் சொற்கள்" என அழகாக அழைக்கப்படும் தொகைச் சொற்கள், தமிழ் மொழியின் சொற்சிந்தனையின் ஆழத்தையும், சுருக்கத்தையும் ஒருங்கே பிரதிபலிக்கின்றன. ஒரு வாக்கியத்தில் உள்ள வேற்றுமையுருபுகள் (like -ஐ, -ஆல், -கு), உவம உருபுகள் (like -போல, - அன்ன), மற்றும் 'உம்' எனும் இணைப்புச் சொல், வினைச்சொற்களின் ஈறுகள், பண்புச்சொற்களின் ஈறுகள் போன்றவை மறைந்தோ அல்லது சுருங்கியோ வரும்போது, அவை தொகைச்சொற்கள் எனப்படுகின்றன. எளிமையாகச் சொல்வதானால், இரண்டு

அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள், அவற்றின் இடையேயான இலக்கண அல்லது பொருண்மையான தொடர்புகளை வெளிப்படையாகக் காட்டாமல், ஒன்றாக இணைந்து ஒரு புதிய பொருளைத் தரும்போது, அது தொகைச்சொல் ஆகும். இந்தத் தொகைப்பு, வெறும் சொற்களின் இணைப்பல்ல; அது ஒரு கருத்தின் தொகுப்பு. உதாரணமாக, "கதிரவன் ஒளி" என்பது "கதிரவனுடைய ஒளி" அல்லது "கதிரவனால் உண்டான ஒளி" எனப் பொருள்படலாம். இங்கு 'உடைய' அல்லது 'ஆல்' போன்ற வேற்றுமையுருபுகள் மறைந்துள்ளன. அதேபோல், "தாமரைமுகம்" என்பதில், 'தாமரை போன்ற முகம்' என்ற உவமை மறைந்துள்ளது. வேற்றுமை உருபுகள் மட்டுமல்லாது, 'உம்' என்னும் இடைச்சொல் மறைந்து வருவதும் தொகைச்சொற்களின் ஒரு வகையாகும். "அவளும் அவனும்" என்பதற்குப் பதிலாக "அவனுமவளும்" என வருவது ஒரு எடுத்துக்காட்டு. மேலும், வினைச்சொற்களிலும், பண்புச்சொற்களிலும் உள்ள ஈறுகள் சுருங்கி வருவதும் இந்த வகைக்குள் அடங்கும். இந்தத் தொகைச் சொற்களின் பயன்பாடு, மொழியின் ஓட்டத்தை மேம்படுத்துகிறது. அவை சொற்களை சுருக்கி, எளிமையாக்கி, வாக்கியத்திற்கு ஒருவித கவித்துவமான ஓட்டத்தையும், ஆழமான பொருளையும் அளிக்கின்றன. ஒவ்வொரு தொகைச்சொல்லும், மறைந்திருக்கும் பல சொற்களின் கதையைத் தனக்குள் அடக்கிக் கொண்டு, கேட்பவருக்கும் படிப்பவருக்கும் சிந்திக்க ஒரு வாய்ப்பை வழங்குகிறது. இதுவே தமிழ் மொழியின் தொன்மையையும், அதன் வளமையையும் பறைசாற்றும் ஒரு முக்கிய அம்சமாகும்.

**தொகைச்சொற்கள்**

தொக்கி வரும் சொற்கள் (மறைந்து வரும் சொற்கள்) தொகைச் சொற்கள் எனப்படுகின்றன. அதாவது வேற்றுமையுருபுகள், உவம உருபுகள், உம் எனும் சொல், வினை, பண்புச் சொற்களின் ஈறு இவை மறைந்து வருவது தொகைச்சொல் எனப்படுகிறது. வேற்றுமை முதலான பொருள்களின் மீது ஒன்றும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாமல் ஒற்றுபோல் பொருந்தி நிற்பது தொகைச் சொற்கள் எனச் சுட்டப்படுகின்றன.

அவ்வகையில் முதலாவது வேற்றுமைத் தொகை குறிப்பிடப்படுகிறது. தொகை மொழிகளுள் முதலில் நிற்பது வேற்றுமைத் தொகையாகும்.

**"வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல" 1**

என வேற்றுமைத் தொகைக்கு இலக்கணம் கூறப்படுகிறது. வேற்றுமைத் தொகை என்பது வேற்றுமைப் பொருண்மை உடைய தொகை என்றும் விரிந்து நிற்கிறது. அதாவது வேற்றுமை உருபு வெளிப்பட்டு நிற்கும் வேற்றுமைத் தொடரினைப் போலவே பொருளுணர்த்துவது. இரண்டாம் வேற்றுமைத் தொகை முதலாக வேற்றுமைத் தொகை ஆறுவகைப்படுத்தப்படுகிறது.

| **வேற்றுமைத் தொகை** | **உருபு தொடர்ப்பொருளை விளக்குதல்** |
|---|---|
| ➢ நிலங்கடந்தான் | நிலத்தைக் கடந்தான் (2) |
| ➢ தாய்மூவர் | தாயோடு மூவர் (3) |
| ➢ கரும்பு வேலி | கரும்பிற்கு வேலி (4) |
| ➢ வரை பாய்தல் | வரையினின்றும் பாய்தல் (5) |
| ➢ சாத்தன் புத்தகம் | சாத்தனது புத்தகம் (6) |
| ➢ மன்றப்பெண்ணை | மன்றத்தின்கண் பெண்ணை (7) |

உவம உருபுத் தொடர் போல பொருளினை உணர்த்தும் தன்மையில் அமைந்து அப்பொருளினை விளக்கும் ஆற்றல் இல்லாத வகையில் அமைவன உவமத்தொகை எனப்படுகிறது.

| **உவமத்தொகை** | **உவம உருபு விரிப்பொருள் விளக்குதல்** |
|---|---|
| ↓ | ↓ |
| ➢ புலிப்பாய்த்து (பாய்ச்சல்) | புலிப்பாய்த்துளன் |
| ➢ மழைவண்கை | மழையன்ன வண்கை |
| ➢ துடிநடுவு | துடியன்ன நடுவு |
| ➢ பொன்மேனி | பொன்னன்ன மேனி |

வினையினை மட்டும் உணர்த்தி நிற்பன வினைச்சொற்களாகும். வினைப் பகுதியாய் நின்று பெயர்த்தன்மை பெற்று வரும் பெயர்கள் செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறுவகைப் பெயரோடு இயைந்து வருவது வினைத்தொகை எனப்படுகிறது. அவ்வகையில்,

**"வினையின் தொகுதி காலத்து இயலும்" 2**

எனத் தொல்காப்பியம் காலத்தைக் காட்டும் உறுப்புகள் மறைந்து முக்காலத்திற்கும் பொதுவாய் நிற்பதை வினைத்தொகையாகக் குறிப்பிடுகிறது.

❖ ஆடரங்கு

ஆடிய அரங்கு - இறப்பு
ஆடுகின்ற அரங்கு - நிகழ்வு
ஆடும் அரங்கு - எதிர்வு

முக்கலாம்
காட்டும் உறுப்புகள்
மறைந்து நின்றன

இவ்வாறு வினை பிரிந்து நின்ற போது தோன்றாத தொகையாற்றலால் காலம் தோன்றும் என்பது இதனால் பெறப்படுகிறது. எனவே இது வினையைக் குறிக்கும் தொகைச் சொல்லாயிற்று.

வண்ணம், வடிவு. அளவு, சுவை என்பனவற்றையும் இவை போல்வனவாகிய பிறவுமாகிய குணத்தை உணர்த்தும் சொல்லும் அதனை ஏற்கும் சொல்லும் இத்தன்மையினை உடையது இப்பொருள் என ஒன்றனை ஒன்று சிறப்பித்து வரும்.

**"வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையினென்று**
**அன்ன பிறவும் அதன்குணம் நுதலி**
**இன்னது இதுவென வரூஉம் இயற்கை**
**என்ன கிளவியும் பண்பின் தொகையே" 3**

இவ்வாறு அமையும் இரு சொற்களும் ஒரு பொருளின் மேல் வரும் இயல்பையுடைய எல்லாத் தொகைச்சொல்லும் பண்புத்தொகை என்று குறிப்பிடப்படுகிறது.

**(எ.கா)** வண்ணப்பண்பு - கருங்குதிரை (கரிதாகிய குதிரை)

**(எ.கா)** வடிவப்பண்பு - வட்டப்பலகை (வட்டமாகிய பலகை)

**(எ.கா)** அளவுப்பண்பு - நெடுங்கோல் (நெடிதாகிய கோல்)

**(எ.கா)** சுவைப் பண்பு - தீங்கரும்பு (தீவிதாகிய கரும்பு)

இங்குப் பண்புச் சொல்லும் பண்புடைப் பொருளைக் குறித்தமையால் இரு சொல்லும் ஒரு பொருளாய் நின்று ஒன்றையொன்று சிறப்பித்து நின்றன.

- சொற்களின் இடையிலும் ஈற்றிலும் எண்ணிடைச் சொல்லாகிய 'உம்' மறைந்து நிற்பது உம்மைத் தொகையாகும். இரு பெயர். பலபெயர், அளவுப் பெயர், உயர்திணை எண்ணியற் பெயர். நிறைப்பெயர், அஃறிணை எண்ணியற் பெயர் ஆகிய ஆறுவகைப் பெயர்ச் சொற்களைப் பொருந்தி அமைவது உம்மைத் தொகை என்பது தொல்காப்பியரின் கருத்தாகும்.

**(எ.கா)**

- உவாப் பதினான்கு - இருபெயராலாகிய உம்மைத்தொகை
- புலிவிற்கெண்டை - பலபெயராலாகிய உம்மைத்தொகை
- தூணிப்பதக்கு - அளவுப் பெயராலாகிய உம்மைத்தொகை
- முப்பத்துமூவர் - எண்ணியற்பெயராலாகிய உம்மைத்தொகை
- தொடியரை - நிறைப்பெயராலாகிய உம்மைத்தொகை
- பதினைந்து - எண்ணுப்பெயராலாகிய உம்மைத்தொகை

என இருபெயர் முதலாகச் சொல்லப்பட்ட அறுவகைச் சொற்திரளைத் தனக்குச் சார்பாகக் குறித்துநிற்கும் தன்மையுடைய உம்மைத்தொகையை,

**"இரு பெயர் பல்பெயர் அளவின் பெயரே**
**எண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி**
**எண்ணின் பெயரோடு அவ்வறு கிளவியும்**
**கண்ணிய நிலைத்தே உம்மைத் தொகையே" 4**

என்பார் தொல்காப்பியர். மேலும் வேற்றுமைத்தொகை முதலாக அமைந்த தொகைகள் இருசொற்களால் அமைகின்ற போது உம்மைத் தொகையானது இருசொல்லாலும் இரண்டிற்கும் மேற்பட்ட பல சொற்களாலும் அமைகின்றது.

- தொகைச் சொற்களுள் இறுதியாகத் தொல்காப்பியர் அன்மொழித் தொகையினைக் குறிப்பிடுகிறார். பண்பு, உம்மை, வேற்றுமை ஆகிய மூன்று தொகைச் சொற்களை நிலைக்களனாகக் கொண்டு அவற்றின் ஈற்றில் அமைந்து தன் பொருளை உணர்த்தவது அன்மொழித் தொகை என்பதைப்

**"பண்புதொக வரூஉங் கிளவி யானும்**
**உம்மை தொக்க பெயர்வயி னானும்**
**வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்**
**ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே" 5**

என்பார்.

அதாவது அன்மொழித் தொகை பெரும்பாலும் பண்புத்தொகையை நிலைக்களனாய்க் கொண்டு பிறக்கும் என்பதும் சிறுபான்மை வேற்றுமை. உம்மைத் தொகைகளை நிலைக்களனாய்க் கொண்டு பிறக்கும் என்பதும் இதனால் பெறப்படுகிறது.

**(எ.கா)**

**வெள்ளாடை -** வெண்மையான ஆடையினள் (பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை)

**தகர ஞாழல் -** தகரமும் ஞாழலுமாகிய சாந்தினள் (உம்மைத் தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை)

**பொற்றொடி -** பொன்னால் ஆகிய தொடியினள் (வேற்றுமைத் தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை)

மேலும் உவமைத் தொகை நிலைக்களத்தும் வினைத் தொகை நிலைக்களத்தும் அன்மொழித் தொகை பிறக்கும் என்பதும் தொல்காப்பியரின் கருத்தாகும்.

**பவளவாய் -** பவளம் போலும் வாயினள் (உவமைத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை)

**திரிதாடி -** திரிந்த தாடியினன் (வினைத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை)

இவ்வாறு பண்புச் சொற்கள் தொக்கி வரும் இடத்திலும், உம்மைத் தொக்கப் பெயர்க்கண்ணும், வேற்றுமைத் தொக்கப் பெயர்க்கண்ணும், சிறுபான்மை உவமை தொக்கப் பெயர்க்கண்ணும், வினைத் தொக்கப் பெயர்க்கண்ணும் இறுதிச் சொற்கள் நின்று நடக்கும் தன்மையை உடையன அன்மொழித் தொகைச் சொல் என்பது புலனாகின்றது.

அறுவகைப்பட்ட தொகைச்சொற்களும் அவற்றினது பொருள் நிலை மரபில் நான்கு இடங்களில் விளங்கித் தோன்றும் என்பதை,

**“முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்**
**இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்**
**அம்மொழி நிலையாது அன்மொழி நிலையலும்**
**அந்நான்கு என்ப பொருள்நிலை மரபே” 6**

என்கிறது இந்நூற்பா.

அதாவது,

**முன்மொழிமேல் பொருள் நிற்றல்**

↓

**(எ.கா)** வேங்கைப்பூ – பூ என்னும் முன்மொழி மேல் நின்றது

பின்மொழி மேல் பொருள் நிற்றல்

↓

**(எ.கா)** அடைகடல் – அடை என்னும் பின்மொழிமேல் நின்றது

இரு மொழி மேல் பொருள் நிற்றல் ↓

**(எ.கா)** இரவு பகல் – இருமொழி மேல் நின்றது.

புற மொழி மேல் நிற்றல்

↓

**(எ.கா)** வெள்ளாடை – உடுத்தான் என்னும் புறமொழி மேல் நின்றது.

இவ்வாறு தொகையும் அவற்றினது பொருள் நிலை மரபும் நான்கு வகைகளில் அமைகின்றன.

**தொகைச்சொற்களின் உருவாக்கம்: தொல்காப்பிய மரபு**

தொல்காப்பியர் காலத்தில், தொகைச்சொல் (Compound Word) என்ற ஒரு தனித்த இலக்கணக் குறியீடு பயன்படுத்தப்படவில்லை. மாறாக, 'தொகுதல்' என்ற வினைச்சொல் மூலம், வேற்றுமை உருபுகள் மறைந்து நிற்கும் நிலையைக் குறித்தார்.

**தொல்காப்பியத்தில் 'தொகுதல்'**

தொல்காப்பியம், சொல்லதிகாரத்தில் வேற்றுமை மயங்கியல் மற்றும் கிளவியாக்கம் ஆகிய பகுதிகளில் சில தொடர்கள் தொக்கு நிற்கும் தன்மையை விவரிக்கிறது.

*"வேற்றுமை குறித்த பொருள் வயினானும்
ஆற்றுதல் உடையவை யிடத்து நிகழ்தலின்
அந்நிலைக் கிளவியும் வேறுபடல் இலவே"* (தொல். சொல். 106)

தொல்காப்பியர் பெரும்பாலும் வேற்றுமை உருபுகள் தொக்கி நிற்கும் (வேற்றுமைத்தொகை) நிலையையே முதன்மையாகக் கருதினார். உதாரணமாக, 'களிறு எறிந்து' (களிறுக்கு எறிந்து அல்லது களிறை எறிந்து) போன்ற தொடர்கள், உருபு மறைந்த நிலையில் சுருக்கமான பொருளைத் தருவதைச் சுட்டினார்.

தொல்காப்பியர் வினைத்தொகை, பண்புத்தொகை போன்றவற்றைத் தனித்த அலகுகளாகப் பார்க்காமல், பெயரெச்சம் அல்லது வினையெச்சத்தின் பொதுவான இலக்கண அமைவுக்குள்ளேயே அடக்கினார்.

உருவாக்கத்தின் அடிப்படை: தொல்காப்பியரின் அணுகுமுறையில், தொகைச்சொல்லின் உருவாக்கம் என்பது, பேசும்போது அல்லது எழுதும் போது சொற்களைக் குறைத்து, ஆனால் சூழலில் இருந்து பொருளை ஊகித்து அறியும் (Contextual Inference) திறன் சார்ந்ததாக இருந்தது. இது மொழியின் இயல்பூக்கத்தால் உருவான சிக்கன முறையாகும்.

தொகைச்சொற்களின் வகைப்பாடு: நன்னூல் செம்மைப்பாடு

தொல்காப்பியத்திற்குப் பிந்தைய இடைக்காலத்தில் தோன்றிய நன்னூல், தொகைச்சொற்களின் இலக்கண அமைப்பைச் செம்மைப்படுத்தி, ஆறு பிரிவுகளாகத் தெளிவான வரையறைகளை அளித்தது. இதுவே இன்றுவரை பாரம்பரிய இலக்கண மரபில் பின்பற்றப்படும் வகைப்பாடாகும்.

பவணந்தி முனிவர் தொகைச்சொல்லை இவ்வாறு வரையறுக்கிறார்:

*"வேற்றுமை வினை பண்பு உவமை உம்மை
அன்மொழி என அவை ஆறாம் தொகைநிலை"* (நன்னூல், 361)

நன்னூலார், தொல்காப்பியர் குறிப்பிட்ட வேற்றுமைத் தொகையோடு சேர்த்து, மேலும் ஐந்து வகைகளைச் சேர்த்து, அவற்றிற்குத் தனித்த இலக்கண அடையாளங்களைக் கொடுத்தார்.

**ஆறுவகைத் தொகைகளின் அமைப்பு**

| வகைப்பாடு | தொக்கி நிற்கும் உறுப்பு | எடுத்துக்காட்டு | விரித்தல் (விளக்கம்) |
|---|---|---|---|

1. வேற்றுமைத்தொகை வேற்றுமை உருபுகள் (ஐ, ஆல், கு, இன், அது, கண்) கரும்பு தின்றான் கரும்பை தின்றான் (இரண்டாம் வேற்றுமை)
2. வினைத்தொகை காலம் காட்டும் இடைநிலைகள் ஆடு கொடி ஆடிய கொடி, ஆடுகின்ற கொடி, ஆடும் கொடி
3. பண்புத்தொகை பண்பு உருபுகள் (மை விகுதி, ஆகிய, ஆன) செம்மலர் செம்மையாகிய மலர்
4. உவமைத்தொகை உவம உருபுகள் (போல, அன்ன) மலர்க்கை மலர் போன்ற கை
5. உம்மைத்தொகை உம் என்னும் இடைச்சொல் சேர சோழர் சேரனும் சோழனும்
6. அன்மொழித் தொகை மேலே உள்ள ஐந்து தொகைகளோடு சேர்ந்து, இன்ன பிற (அன்மொழி) உருபுகள் பொற்றொடி பொற்றொடியை உடையவள் (பொன்னால் ஆன வளையல், அதன் ஆகுபெயர்)

**அன்மொழித் தொகையின் சிறப்பு (மெய்ப்பாடு)**

ஆறு வகைத் தொகைகளில் அன்மொழித்தொகை (Out-of-word compound) மிகவும் செறிவான அமைப்பைக் கொண்டது. இது மற்ற ஐந்து வகைத் தொகைகளின் அடிப்படையில் அமைந்து, அவற்றின் பொருளோடு தொடர்பில்லாத, ஆனால் அவற்றால் சுட்டப்படும் வேற்றுப் பொருளைக் குறிக்கும். இது அடிப்படையில் ஒரு ஆகுபெயர் (Metonymy) ஆகும்.

உதாரணமாக, 'வெண்கலக் கிண்ணம் பேசினான்'—இங்குப் பேசுவது கிண்ணம் அல்ல, மாறாக வெண்கலக் கிண்ணத்தை ஏந்திய வணிகன் அல்லது மனிதன். இங்கு 'வெண்கலக் கிண்ணம்' என்பது மூன்றாம் வேற்றுமைத் தொகையாக நின்று, அதனுடன் 'உடையவன்' என்ற வேறு சொல் தொக்கி, அன்மொழித்தொகையாகிறது. இது தமிழ் மொழியின் ஆழமான குறியீட்டுத் திறனைக் காட்டுவதாகும்.

**முடிவுரை (Conclusion)**

தமிழ் இலக்கண மரபில் தொகைச்சொற்களின் வரலாறு, தொல்காப்பியரின் 'தொகுதல்' என்ற பொதுவான அவதானிப்பிலிருந்து தொடங்கி, நன்னூலாரின் துல்லியமான ஆறுவகை வகைப்பாடு வரை செம்மைப்படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்த இலக்கணக்கூறு, மொழியின் ஆழமான சொற் சிக்கனத் தேவையிலிருந்து உருவானதாகும்.

தொகைச்சொற்கள், தமக்குள்ளே மறைந்திருக்கும் இலக்கண உருபுகள் மூலம், அதிகபட்ச பொருண்மச் செறிவை மிகக் குறைந்த சொற்களில் கொண்டு சேர்ப்பதால், தமிழ் மொழியின் வெளிப்பாட்டுத் திறனுக்கு இவை முதுகெலும்பாக அமைகின்றன. வேற்றுமைத் தொகையும் வினைத்தொகையும் காலந்தோறும் அதிகப் பயன்பாட்டில் இருக்க, அன்மொழித்தொகை தமிழ் மொழியின் குறியீட்டு வளமையைக் காட்டுகிறது.

நவீன சூழலில், ஆங்கிலக் கூட்டுச்சொற்களின் தாக்கம் இருந்தபோதிலும், பாரம்பரிய தொகைச்சொல் அமைப்புகள் தமிழின் அறிவியல் மற்றும் நிர்வாகப் பதங்களை உருவாக்குவதில் இன்றியமையாத பங்காற்றி வருகின்றன. எனவே, தொகைச்சொல் என்பது வெறுமனே இலக்கண

விதியாக மட்டும் இல்லாமல், தமிழ் மொழியின் வரலாற்றுப் பண்பாட்டுச் சுருக்கமாகவும், அதன் இயங்குதிறனுக்கான சான்றாகவும் விளங்குகிறது.

**சான்றாதாரங்கள்**


1. தொல்காப்பியர். (கி.மு. 3 ஆம் நூற்றாண்டு). தொல்காப்பியம்: சொல்லதிகாரம். இளம்பூரணர் உரையுடன்.
2. பவணந்தி முனிவர். (பொ.யு. 13 ஆம் நூற்றாண்டு). நன்னூல். மயிலைநாதர் உரையுடன். சாரதா பதிப்பகம்.
3. சுப்பிரமணியன், ச. வே. (2014). தமிழ் இலக்கணக் கோட்பாடு. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
4. வை. முத்துசாமி, ம. (2018). தமிழ் இலக்கண மரபு: ஓர் அறிமுகம். அன்னம் பதிப்பகம்.
5. செல்லப்பன், கி. (2010). தொகைச்சொல் இலக்கணம். அமுத நிலையம்.
6. ராஜமாணிக்கம், ம. (1995). தமிழ் இலக்கண வரலாறு. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.


**References:**


1. Tolkāppiyam, Sol. 413.
2. Tolkāppiyam, Sol. 415.
3. Tolkāppiyam, Sol. 416.
4. Tolkāppiyam, Sol. 417.
5. Tolkāppiyam, Sol. 418.
6. Tolkāppiyam, Sol. 419.


நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement: இல்லை/NIL

கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement: இல்லை/NIL

கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன் I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.